Sept 2001 / INDIA's Role As it emerges as force

## உலகமே சீரழியும் அபாயம்!

அமெரிக்காவில் இஸ்லாமிய தீவிரவாதிகள் நடத்தியுள்ள பேரழிவுகளும், உயிர்ச்சேதங் களும் உலகையே அதிர்ச்சியிலும், அனுதாபத் திலும் உறைய வைத்துள்ளன.

மிகக் கடுமையாக கண்டிக்கப்பட வேண்டிய, நசுக்கப்பட வேண்டிய இந்த இழி செயல்களுக்கு எதிராக, முக்கியமாக இஸ்லாமிய நாடுகளும், இஸ்லாமிய பெருமக்களும் குரல் கொடுக்க வேண்டும்.

தத்தம் நாடுகளில் மறைமுகமாகவோ, நேரடியாகவோ செயல் பட்டுவரும் எல்லா தீவிரவாத அமைப்புகளையும் தடை செய்து அவற்றை பூண்டோடு அழிக்க உறுதி கொள்ள வேண்டும். இல்லையென்றால் இது உலக கிறிஸ்தவ நாடுகளுக்கும், இஸ்லா மிய நாடுகளுக்கும் இடையே பெரும் பிளவை ஏற்படுத்தி உலக பொருளாதாரத்தையும், அமைதியையும் சீழித்துவிடும்.

அதேசமயம், அமெரிக்கா தனக்கு யாரும் நிகரில்லை என்ற நினைப்பில் எல்லா நாடுகளின் பிரச்னைகளிலும் தன் மூக்கை நுழைக்கும் தன்மையை மாற்றிக் கொண்டு, உலக நாடுகளில் அமைதியையும், ஆக்கத்தையும் வளர்க்கும் ஒரு நண்பனாக தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தியா பல்லாண்டு காலமாக இத்தகைய தீவிரவாத அமைப் புகளை எதிர்த்து மிகுந்த எச்சரிக்கையுடன் போராடி வருகிறது. சில சமயங்களில் ஒரு பெரிய நாட்டிற்கு இத்தனை பொறுமை தேவையா? இப்பொறுமை நமக்கு பெருமை சேர்ப்பதாக இல்லையே என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

எல்லா மக்களும் ஒரு இறைவனின் அன்புக்குழந்தைகள் என்பதை பூரணமாக உணர்ந்து, எல்லா மதங்களையும் ஆத ரித்து சமபாங்கில் மதித்து உலக க்ஷேமத்தை வேண்டி பிரார்த் தனை செய்யும் இந்த இந்திய கலாசாரமும், இந்திய பண்பாடும் விஸ்வரூபமெடுத்து உலகை, அமைதியையும், ஆனந்தத் தையும் நோக்கி நடத்திச் செல்லட்டும்.

நடந்து முடிந்த இந்த கோரத்தாண்டவம், உலக மக்களை உறுதியுடன் ஒன்றுபடச் செய்து தீவிரவாதத்தை பூண்டோடு அழிப்பதற்கு வழி கோலட்டும்.

— ந.ஹரிஹரசுப்பிரமணியன், சென்னை.

பேக்ஸ் கடிதம்.

மருத்துவர், பொறியாளர் எனும் கனவுகளோடு செல்லும் இந்த மாணவச் செல்வங்கள் வைத்தி யக்காரர்களாக திரும்பி வருகின் றனர். டியூஷன் பிரச்னையால் என் மகன் வாழ்வு நேரடியா கவே பாதிக்கப்பட்டதால் இந்த வேதனை.

டியூஷனை தடை செய்து மாநில அரசு சட்டம் கொண்டு வந்தால் எங்களைப் போன்றவர் களுக்கு மகிழ்ச்சி.

—கு.கோப்பெருந்தேவி, சென்னை.

## விவசாயிகள் கண்களில் கண்ணீர்

கர்நாடகம், தமிழகம் ஆக இரண்டு மாநில அரசுகளும் பேச்சுவார்த்தை என்றும், பரிசீ லனை என்றும் கூறிக் கொண்டே இருந்தால் இயற்கை இவர்களுக்கு ஒத்து ழைக்குமா என்ன? பேச்சு வார்த்தை நடந்து கொண்டே இருக்கட்டும் அதற்குள் இயற் கையாக பார்த்து பருவமழை பெய்யாதா? என ஆவலோடு எதிர்பார்த்தவண்ணம் உள்ளனர் விவசாயிகள்.

இன்று வருமா நாளை வருமா மழை என்று நித்தம் ஒரு எதிர்பார்ப்போடு காத்துக் கிடப்பதோ நெல் விவசாயிகள். இன்று வரும் நாளை வரும் என்று தவணை முறை சொல்வதோ மாநில அரசு. எது எப்படியோ என்றாவது ஒருநாள் வந்தாலும் வரலாம் காவிரித் தண்ணீர். ஆனால், அன்றாடம் விவசாயிகளின் கண்களிலோ கண்ணீர்.

சேமிப்பு கிடங்குகளில்தான் நெல் குவிந்து பாழாகி றதே. இன்னும், தமிழகத்திற்கு நெல்லின் தேவைதான் எதற்கு என்று மாநில அரசுகள் காவிரி பிரச்னையில் மெத்தனப் போக்கை கடைப்பிடிக்கிறதோ என்று கருத வேண்டியிருக்கி றது.

— கு.ராஜுகுமார், விருத்தாசலம்.

## அரசின் அக்கறையின்மை...

ஒரு நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டு மெனில் அதற்கு கல்வியறிவு பெற்றவர்கள் அதிகம் இருக்க வேண்டும் என்று பொருளியல் அறிஞர் 'அமர்த்தியா சென்' கூறி யுள்ளார். அன்னிய முதலீடு இங்கு அதிகரிக்க வேண்டு மெனில் கல்வியறிவு பெற்ற திற மையான தொழிலாளர்கள் அதிகம் இருக்க வேண்டும்.

வல்லரசு நாடுகளின் வர லாற்றை புரட்டிப் பார்த்தால் அந்நாடுகளில் 98 சதவீதத் துக்கும் மேலானோர் கல்விய றிவு பெற்று அதன்மூலம் சிறந்த வளர்ச்சியை பெற்றுள் ளனர் என்பது தெரியும்.

ஆனால் நமது நிலை என்ன? கல்வியறிவு 1991ல் 52.1 சத வீதம் பேர் பெற்றிருந்தனர். 1998-99ம் ஆண்டில் இது 63 சதவீதமாக உயர்ந்துள்ளது. இன்றைய நிலையில் 6-14 வய துக்கு உட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 20 கோடி. இதில் 12 கோடி குழந்தைகள் மட்டுமே பள்ளிக்கு செல்கின் றனர். பெண் குழந்தைகளில் 2ல் ஒரு குழந்தை கல்வியறிவு பெறாமலேயே வளர்கிறது.

தனியார் பள்ளிகளோடு ஒப்பிடுகையில் அரசு பள்ளி களில் கல்வியின் தரம் குறைவு என்ற கருத்து மக்களிடையே நிலவுகின்றது.

பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் எழுத்தறிவு பெற்ற வர்களின் எண்ணிக்கை 2007க்குள் 72 சதவீதம், 2012க்குள் 80 சதவீதம் அதிகரிக்கும் என திட்ட கமிஷன் கூறியுள்ளது. அப்போது கூட 5ல் ஒரு இந்தியன் எழுதப்படிக்கத் தெரி யாதவனாகவே இருப்பான்.

அரசு கல்விக்காக ஒதுக்கு கிற நிதி மிகவும் குறைவு. எனவே அரசு தொலைநோக்கு பார்வையில் இதை அணுகி அதிக அளவு இதில் முதலீடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் விரைவில் நம் நாடும் வல்லரசு நாடாகும் என்பதில் ஐயமில்லை.

கல்வித் தரத்தில் இந்தியா, ஆசியாவிலேயே ஐந்தாம் இடம் வகிப்பது மட்டும் சற்று ஆறுதலான விஷயமாக இருக் கிறது.

— எஸ்.சுந்தரபாண்டியன், வைகை அணை.

செப்டம்பர் 2001

N2